[2002 ஏப்ரல் 22

198—

பால் குளிரூட்டும் நிலையம்

***7032-திருமதி காசாம்பு பூமாலை:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சின்னசேலம் பால் குளிரூட்டும் நிலையத்தில் பால் கொள்ளளவு திறன் அதிகரிக்கப்படுமா?

(ஆ) சங்கராபுரம் பகுதியில் தனி பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கப்படுமா?

(இ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம். சின்னசேலம் பால் குளிரூட்டும் நிலையத்தில் பால் குளிரூட்டும் திறன் அதிகரிக்கப்படவுள்ளது.

(ஆ) சங்கராபுரம் பகுதியில் தனியாக ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பதற்கு தற்போது வாய்ப்பு இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திருமதி காசாம்பு பூமாலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான சின்னசேலம் பகுதி பால் மிக மிக அதிகமாக உற்பத்தி ஆகின்ற பகுதி. எனவே அப்பகுதி மக்களுக்கு பயன்படும் வகையில் சின்னசேலம் பால் குளிரூட்டும் நிலையத்தின் கொள்ளளவு திறன் அதிகரிக்கப்படுமா? மேலும், சங்கராபுரம் பகுதியில் பால் உற்பத்தி அதிகமாக உள்ளதால்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: காசாம்பு, அதிகரிக்கப்படும் என்று சொல்லிவிட்டார்.

திருமதி காசாம்பு பூமாலை: உற்பத்தி அதிகமாகின்ற காரணத்தால், சில கிராமங்களில், மஞ்சப்புத்தூர், நெடுமானூர், பாலப்பட்டு, இப்படிப்பட்ட கிராமங்களில் பால் உற்பத்தி அதிகமாக இருக்கின்ற

2002 ஏப்ரல் 22]

காரணத்தினால் அங்கு தனி குளிரூட்டும் சாதனம் அமைக்க முடியுமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்னசேலம் பால் குளிரூட்டும் நிலையமானது விழுப்புரம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின்கீழ் நாள் ஒன்றுக்கு 30,000 லிட்டர் திறன் என்கிற அளவில் நிறுவப்பட்டு, தற்போது 86,000 லிட்டர் பால் இந்நிலையத்தில் குளிர்விக்கப்பட்டு வருகிறது. இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின் அடிப்படையில் இதனை மேம்படுத்தி நாள் ஒன்றுக்கு ஒரு இலட்சம் லிட்டராக மாற்றியமைக்கவும், அடிப்படை வசதிகளை உருவாக்கவும், இருக்கும் வசதிகளை நவீனப்படுத்தவும், தேசிய பால்வள வாரியத்தின் தொழில் நுட்ப ஆலோசனைக்குட்பட்டு மைய அரசின் ஒன்றியங்கள் புனரமைப்புத் திட்டத்தின்கீழ் மத்திய–மாநில அரசின் நிதியுதவியின்கீழ் ஒரு திட்டவரைவு தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தப் புனரமைப்புத் திட்டமானது ஈரோடு மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள் அடங்கிய திட்டமாகும். எனவே விழுப்புரத்தில் ஈரோடு ஒன்றியத்தையும் சேர்த்து மாநில அரசின் பங்கான 50 விழுக்காடு ரூ.6.50 கோடி ஏற்கெனவே இத்திட்டத்தின்கீழ் அளிக்கப்பட்டுவிட்டது. மைய அரசின் பங்கான 50 விழுக்காடு ரூ.6.50 கோடி பெறுவதற்கு இணையத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்தொகை பெறப்பட்டவுடன் பணி விரைவில் முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சின்னசேலம் பால் குளிரூட்டும் நிலையம் தரம் உயர்த்தப்படவுள்ளதாலும், புதிதாக பால் குளிரூட்டும் நிலையம் உருவாக ரூ. 4 கோடி நிதி ஆதாரம் தேவைப்படுவதாலும், தற்போதைய நிதிநிலையைக் கருத்தில் கொண்டு, சங்கராபுரம் பகுதியில் புதிதாகப் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க, தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 199, திரு. கா. கந்தசாமி, திரு. ஐ. கணேசன், திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன் மற்றும் திரு. சோ. இராசேந்திரன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்.